**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.186/2021**

2025 ஆம் வருடம் மார்ச் மாதம் 12 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மாரிமுத்து (அ.சா.4) | தொழில் | : | விவசாயம் |
| த/பெ., க/பெ. | : | திரு.சுப்பிரமணி | வயது | : | 42 |
| கிராமம் | : | கீரனூர் | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 12.03.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

6–ம் எதிரி முன்னிலையாகவில்லை. மற்ற எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

நான் கீரனூரில் குடியிருந்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் 5–வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–**

கடந்த 19.11.2017 ஆம் தேதி மதியம் சுமார் 1.00 மணிக்கு நானும், முருகேசனும் பெரிச்சிபாளையம் பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்தபோது கீரனூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற எண்.268/2017 என்ற வழக்கின் எதிரியான மோகன்ராஜ் என்பவரை எங்கள் முன்பு கைது செய்து வழக்கு பற்றிய விபரங்களைத் தெரிவித்து எதிரி மோகன்ராஜ் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள்

முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், அதில் நானும், முருகேசனும் சாட்சி கையொப்பமிட்டோம் என்றும், பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தின் அத்தாட்சியிலும் நானும், முருகேசனும் கையொப்பம் செய்தோம் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.03.12 12:08:09 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.